# Tamil Prayer (தமிழ் ஜெபம்)

**கோவிட் வைரஸ் பரவிவரும் நிலையில் செய்யப்படும் மன்றாட்டு ஜெபம்**

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்களைக் குணமாக்குகிற கர்த்தாவே, குழப்பநிலையிலும் மற்றும் சுகவீனம், பயம் போன்ற நிலைகளினாலும் பாரமடைந்து காணப்படும் மனிதகுலமனைத்திற்கும் உமது கருணையைப் பொழிந்தருளும்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு, எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும். கர்த்தாவே, கொரோனாவைரஸ் உலக முழுவதிலும் பரவிவரும் நிலையில் எங்களுக்கு ஒத்தாசையாயிருந்தருளும். சுகவீனமாயிருப்பவர்களை சுகப்படுத்தும். அவர்கள் குடும்பங்களும், மற்றும் நண்பர்களும் அந்த வைரசினால் தொற்று ஏற்படாமல் காத்துக் கொள்ளப்பட உதவி, அவர்களைத் தாங்கியருளும்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு,எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும். கர்த்தாவே ,உமது அன்பின் ஆவியையும், சுய ஒழுக்கத்தையும் எங்களுக்குத்தந்து, அந்த வைரஸ் கட்டுப்படுத்தப்படவும், ஒழிக்கப்படவும் தக்கதாக நாங்கள் கூடி வர எங்களுக்கு உதவியருளும்

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு, எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும்கர்த்தாவே, அநேகரை இன்னல்களுக்குட்படுத்தி, அவர்களை மரணத்திற்கு நேராக இழுத்துச் செல்லும் மலேரியா, டெங்கு, புற்றுநோய் மற்றும் HIV/AIDS போன்ற வியாதிகள் ஒழிக்கப்படும்படியாகவும் நாங்கள் தீவிரம், கவனம், சுறுசுறுப்பு என்பதான முறைகளில் செயல்படும்படியாகவும் கிருபையளியும்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு, எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும் கர்த்தாவே, வைரஸ் எங்களை அச்சுறுத்தும் வேளையில் மட்டும் கவனமேற்கொள்ளும் எங்களது சுயநலம், அக்கறையின்மை போன்ற மனப்பாங்குகளைக் குணப்படுத்தும். .தங்கள் அயலகத்தாரிடம் கரிசனையின்றி செயல்படும் அச்சம், பயம் போன்ற குணங்களுக்கு அப்பாற்பட்டு நாங்கள் செயல்புரிய வழியைத் திறந்தருளும்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு, எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும் ' கர்த்தாவே, பொதுநலப் பணிகளிலும், மருத்துவப்பணியிலும் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களை திடப்படுத்தி, அவர்களை ஊக்குவித்தருளும். மேற்பார்வையாளர்கள், தாதியர், பணியாளர்கள், நோயுற்றோர் ' மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு கவனிப்பு வழங்க தங்களை அர்ப்பணித்துள்ளவர்களுக்காகவும் வேண்டுகிறோம்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

.

எங்கள் அழுகையைக் கேட்டு,எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும் கர்த்தாவே, இந்த வைரஸ்கான ஒரு தடுப்பு/மாற்றுமருந்து உருவாக்குவதில் தங்கள முனைப்பைச் செலுத்தும் எல்லா ஆராய்ச்சியாளர்களுக்கும் நம்பிக்கையையும், உள்ளான அறிவையும் வழங்கி, அவர்களை உற்சாகப்படுத்தும்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு, எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும் கர்த்தாவே, கடையடைப்பு, வேலை நிறுத்தம், எல்லை மூடப்படுதல் போன்ற கட்டுப்பாடுகளினால் தங்கள் வாழ்வாதாரம் இழந்துதவிக்கும் பணியாளர்கள் மற்றும் தொழிலதிபர்களைத் தாங்கியருளும். பயணம் மேற்கொள்ளத்தவிர்க்க முடியாத நிலையிலுள்ளவர்களைப்பாதுகாத்து, அவர்களை உமது அன்பினால் அரவணைத்தருளும்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு, எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும் கர்த்தாவே, நாட்டின் தலைவர்கள் உண்மையைப் பேசவும், தவறான தகவல்களைப் பரப்பாதிருக்கவும், நீதிநியாயத்தோடு செயல்படவும் அவர்களை வழிநடத்தி, உமது விசுவாச குடும்பத்தினர் அனைவரும் குணமாகுதலை அறிந்து கொள்ள கிருபை செய்யும்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு, எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும் கர்த்தாவே,எங்கள் உலகைக் குணப்படுத்தும். எங்கள் சரீரங்களை சுகப்படுத்தும். எங்கள் இருதயங்களையும் உள்ளங்களையும் பலப்படுத்தும். குழப்பங்கள் மத்தியிலும் எங்களுக்கு நம்பிக்கையையும் சமாதானத்தையும் அருளும்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு, எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும் கர்த்தாவே,மரித்துப் போனவர்களையும், இந்நாளில் மரிப்பவர்களையும் உமது இதமான அரவணைப்பில் ஏற்றுக் கொள்ளும். அவர்களின் அன்பிற்குரியவர்களை நம்பிக்கையின்மையிலிருந்து விடுவித்துத் தேற்றும்.

**எங்கள் ஜெபத்தை கேட்டருளும்**

எங்கள் அழுகையைக் கேட்டு, எங்கள் ஜெபத்திற்குச் செவிகொடுத்தருளும் கர்த்தாவே, உமதுஅன்பின் மக்களையும், மனிதகுலம் அனைத்தையும் மற்றும் உமது படைப்புகளையும் உமது அன்பில் நினைத்தருளும்.

**ஆமென்!**